RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s197

OPEN ACCESS

# அர்த்தமுள்ள இந்து மதம் காட்டும் அறம்

ஞா. லலிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, உ.நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி-601204, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in “Arthamulla Indhu Matham”

G. Lalitha [a, *]

[a] Department of Tamil, L.N. Government College, PonnerI-601204, Tamil Nadu, India

* Corresponding Author: lalithama2014@gmail.com

Received: 27-07-2022
Revised: 07-10-2022
Accepted: 20-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Kanadhasan’s “Arthamulla Indhu Matham” contains ten parts. Religious concepts of Hinduism are handled very well in this book. Religions are doing the humane work of improving man. Religion is an effective tool to improve relationships between human minds. Religion is a teacher and it teaches love and virtue to all people. Religion helps to make the feeling of unity prevail and love to blossom in the hearts of people. This article brings forth the concepts of individual human morality, social life, development of moral thinking, family, life thoughts and so on. A man who live his life between moral and peaceful situation is considered to be good in the society. Kanadhasan mentions that by serving the world one can forget his difficulties and one should not be selfish rather should help others. The Bible says to love your neighbor as you love yourself. Love is an important thing in human life. One can change the path of life through the virtue of love.

**Keywords:** Meaningful Hinduism, Kannadasan, Virtue, Samadharma, Household

## முன்னுரை

அறம் என்பது ஒரு மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக்கொள்ளும் நெறிகள் இறுதியாக வகுத்துக்கண்ட நடத்தைகள். செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆக வேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித் தொகையே அறம்.

“அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்

இழுக்கா இயன்றது அறம்”

இக்குறளில் பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறம் என்று திருவள்ளுவர் பதிவு செய்கிறார் (Kanniyappa Nayakar, 1968).

ஆகவே, அறம் என்பதை மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதி எனலாம்.

கண்ணதாசனின் ‘அர்த்தமுள்ள இந்து மதம்’ பத்துப் பாகங்களாக வெளிவந்துள்ளது. இதில் இந்து மதக்கருத்துகள் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. மதங்களே மனிதனைச் செம்மையாக்கும் மாண்புறு பணியினைச் செய்து வருகின்றன. மனித மனங்களுள் உறவுகள் மேம்படச் செய்யும் சீர்மிகு கருவியாக மதம் விளங்குகிறது. அனைத்து மக்களுக்கும் அன்பையும் அறத்தையும் போதிக்கும்

ஆசானாக மதம் விளங்குகின்றது. ஒற்றுமை உணர்வு மேலோங்கவும் உள்ளங்களில் அன்பு மலரவும் மதமானது மாண்புறு கருவியாக விளங்குகிறது. "நான் என்னும் எண்ணம் ஒருவனுக்குத் தோன்றுகின்றதென்றால் அவன் தோல்விகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றான்" (Gandhi Kannadasan, 2020). நம் வாழ்க்கையில் நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியும் இறைவனுடைய ஏட்டினிலே உடனுக்குடன் பதிவு செய்யப்படுகின்றது. நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் நற்பலன் ஏற்படுகிறது. தீமை செய்தால் கண்டிப்பாக அதற்குரிய தண்டனை கிடைக்கிறது. இவை இறைவனின் தீர்ப்புகள் என்பதனைக் கவியரசு கண்ணதாசன் தன் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளே கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' எனும் நூலாகும்.

## தனிமனித ஒழுக்கம்

வாழ்க்கை ஆசையிலும் நம்பிக்கையிலுமே ஓடிக் கொண்டிருக்கிறது. சராசரி மனிதனை ஆசை தான் இழுத்துச் செல்கிறது. தவறுக்கெல்லாம் அதுவே காரணமாகிறது. வேண்டும் என்கிற உள்ளம் விரிவடைந்துக் கொண்டே போகிறது. போதும் என்ற மனம் சாகும் வரை வருவதில்லை.

தனிமனித ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர் கண்ணதாசன் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தி தம் திரையிசைப் பாடல்கள் பலவற்றைப் படைத்துள்ளார்.

"உன்னையறிந்தால் - நீ உன்னையறிந்தால்

உலகத்தில் போராடலாம்

உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - தலை

வணங்காமல் நீ வாழலாம்"

என்பதில் மனித வாழ்வில் எந்த நிலை வந்தாலும் தலைவணங்காமல் வாழ வேண்டும் அதுவே தலைச் சிறந்த ஒழுக்கம் எனக் கூறுகிறார் (Kannadasan, 1998).

தாயையும் தந்தையையும் தெய்வீக நிலையில் வைத்துப்போற்றியது இந்து மதம். ஆதி, அந்தம் இல்லாதவன் இறைவன் என்ற தத்துவத்தை உணர்த்தியதே இந்துமதம். "தாயை வணங்கு தந்தையைத்தொழு தாயின் சிறந்ததொரு கோவிலும் இல்லை கோவிலில் சென்று அடையும் புண்ணியத்தை விடத் தாயை வணங்கக் கிடைப்பதும் பெரும் புண்ணியம்", என்று தனிமனித ஒழுக்கத்தை இந்து சமயத்தின் சிறப்பியல்புகளில் கூறுகளாக 'தாய் ஒரு விளக்கம்' என்ற தலைப்பின் மூலம் தாயின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளார் (Gandhi Kannadasan, 2020).

## சமுதாயத் தோற்றம்

சமூகம் என்பது அனைத்து மக்களையும் கொண்டது. "தனி மனிதன் மற்றொருவருடன் சேர்ந்து வாழும் நிலையில்தான் சமுதாயம் உருவாகும். தனி மனிதர் குடும்பங்களாக, குழுமங்களாக, குடிகளாக ஒருவரை ஒருவர் வாழ்வுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் பெருக்கத்திற்காகவும் சார்ந்து வாழும் போது சமுதாயம் உருவாகிறது. இதனால் மனிதன் பிறக்கும் போதே சமுதாயத்திற்குள் புகுகின்றான்" என்று குறிப்பிடுகிறார் (Annithamasu, 2000).

தொல்காப்பியரின் காலத்திற்கு முன்பே மனித சமூகம் நாகரிகத்துடன் தோன்றிவிட்டனஎன்பதைஎன்ப, என்மனார் புலவர் போன்ற சொற்களின் மூலம் தொல்காப்பியர் உணர்த்துவதின் மூலம் அறியலாம்.

"அவற்றுள்

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"

"ஆயர் வேட்டுவர் ஆடுஉ திணைப்பெயர்

ஆவியின் வருஉம் கிழவரும் உளரே”

முதலிய தொல்காப்பிய நூற்பாக்களின் மூலம் நிலப்பாகுபாடு, அந்நிலத்திற்குரிய மக்கள், அம்மக்களுக்குரிய தொழில்கள் ஆகியவைகளைக் குறித்த செய்திகள் காணப்படுவதால் காலத்திற்கு முன்பே நிலைத்த பண்பாடுடைய சமுதாயம் இருந்தது என்பது புலனாகிறது (Tholkappiyar, 1996).

## சமூக வாழ்வியல் கருத்துகள்

துன்பம் என்னும் புரை அகற்றி நற்பயிரை வளர்க்க உதவுகிறது. சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் மனதில் நம்பிக்கையூட்டி நல்வழிப்படுத்த வாழ்வியல் கருத்துகள் உதவுகின்றன. மக்கள் நலனுக்கு முக்கிய ஊன்றுகோலாக இருப்பது வாழ்வியல் கருத்துகளாகும். மனிதனை நெறிப்படுத்தி, அமைதியை வழங்கி, செய்யும் தீமையைத் தடுக்க வாழ்வியல் கருத்துகள் பெரிதும் உதவுகின்றன.

அர்த்தமுள்ள இந்து மதத்தில் இடம் பெறும் வாழ்வியல் அறம் சார்ந்த கருத்துகளாக ஆசை, கற்பு, மனித மனம், வினைப்பயன், நம்பிக்கை, துன்பக் கருத்துகள், மெய்யுணர்வு, ஞானவழிகள், சந்தர்ப்பம், கல்வி, மரணம் என்பவனவற்றைக் குறிப்பிடலாம்.

கண்ணில் காணும் அனைத்தும் தனக்கே என விரும்புவது ஆசை. “துன்பத்திற்குக் காரணம் ஆசை என்று புத்தமதம் கூறுகிறது. வேண்டும் என்னும் மனம் விரிவடைகிறது போதும் என்னும் மனம் சாகும் வரை வருவதில்லை” என்று ஆசையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (Gandhi Kannadasan, 2020).

பரம்பொருள் மீது கொண்ட பற்று, நிலையற்றப் பொருளின் மீது உள்ள ஆசையைத் தடுக்கும் என்பதையும் ஆசையை ஒழித்தலே இறைநிலை என்பதையும் கவியரசு அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனித சமுதாயத்தில் ‘கற்பு’ என்பது பெண்களின் அறம் சார்புடைய நெறியான வாழ்க்கையைச் சித்தரிப்பதாக மட்டுமே நடைமுறையில் இருந்தாலும், இதற்கு ஆண்களும் விதிவிலக்கல்ல என்ற நிலையினை இந்துமதம் வலியுறுத்துகிறது.

மனம் சலனங்களுக்கும் சபலங்களுக்கும் ஆட்பட்டது. அதனை, உணர்ந்த கவியரசு சிதறிய மனத்தைச் சீக்கிரத்தில் அடக்க முடியாது. மனத்தின் அலைகளே உடம்பைச் செலுத்துகின்றன. மனதைச் சிதற விட்டால் அதன் நிலை நூலறுந்தப் பட்டம் போன்று ஆகிவிடும் என்கிறார்.

ஓடிக் கொண்டிருக்கும் வெள்ளத்தை அணைபோட்டு, தடுத்து நிறுத்துவது போல், பிராத்தனையானது துயரங்களை நிறுத்துகிறது. இயற்கையாகவே அது ஒரு மனச் சாந்தியை உண்டாக்குகிறது. “மனம் எதையும் செய்யவல்லது என்ற முழு உணர்வு உறுதியாக இந்தியர்களின் உள்ளத்தில் ஊன்றிவிட்டதால் மனதில் ஆற்றல் ஆராய்ச்சிக்குரிய ஒன்றாயிற்று” என்கிறார் (Vivekananda, 1985).

## அறச் சிந்தனையை வளர்த்தல்

மனிதனை வருந்தச் செய்வதும் நிலை குலையச் செய்வதும் துன்பம். இதில் மனிதர்களில் யாரும் விதிவிலக்கல்ல. துன்பம் என்பது மனக்கவலையாகக் கொள்ளப்படும். கவலைகள் வெளியேற அழுகை முக்கியக் காரணியாக இருக்கின்றது.

நிரந்தரம் எதுவும் இல்லை. நதி வறண்டுப் போகும். குளம் வற்றிப்போகும், மரங்கள் இலையுதிரும். அடுத்து சில நாட்களிலே நதி பெருக்கெடுத்தோடும். குளம் பொங்கி வழியும். மரங்களில் இலைகள் தளிர் விடும். இவ்வாறே மனித இயல்பில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருபவை. என்பதை,

“இடுக்கண் வருங்கால் நகுக அதனை

அடுத்தூர்வது அஃதொப்பது இல்”

என்ற குறளின் வழி திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார் (Kanniyappa Nayakar, 1968).

அன்பு காட்டும் உள்ளத்தில் அனுதாபம் பிறக்கிறது. இது தான் துயரத்தின் வெளிப்பாடு ஆகும். வெண்ணெய் உருகி நெய்யாகலாம். எக்காலத்திலும் நெய் வெண்ணெய்யாக மாற்றமடையாது. அதுபோல எந்த துன்பமும் மீண்டும் துன்பம் ஆகாது என்பதை அர்த்தமுள்ள இந்து மதம்மூலம் கவியரசு கண்ணதாசன் கூறுகிறார்.

கடவுளின் அவதாரங்களே கூட இம்மாதிரியான சோதனைகளிலிருந்து தப்பவில்லை. இராமனுக்கே பொய்மான் எது? உண்மை மான் எது? என்று தெரியவில்லை. பாரதத்தில் தருமனுக்கே கூட சூதாடக் கூடாது என்ற புத்தி உதயமாகவில்லையே! முக்காலமும் உணர்ந்த கௌதம முனிவருக்குப் பொய்க் கோழி எது? உண்மைக் கோழி எது? என்று தெரியவில்லையே என்று இதிகாசங்களைக் கூறி துன்பங்கள் என்பது வந்தே தீருமென்றும், அவை இறைவனின் சோதனைகள் என்றும், அவற்றுக்காகக் கலங்குவதும், கண்ணீர் சிந்துவதும் முட்டாள்தனம் என்ற கருத்தினைக் கண்ணதாசன் தன்னுடைய அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலில் துன்பம் ஒரு சோதனை என்ற தலைப்பில் எடுத்துரைக்கிறார்.

## சம தர்மம்

எல்லோருக்கும் தேவையான உதவிகளைத் தேவையறிந்து பாகுபாடின்றி செய்யும் நல் உதவியைச் சமதர்மம் எனலாம். தர்மம் சரியாக விநியோகிக்கப்பட வேண்டும் என்பதே இந்து மதத்தின் சாரம்.

ஒரு ஏழையும் பணக்காரனாக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால், அந்த வாய்ப்புகள் தடுக்கப்பட்டவன் தான் ஏழையாக இருக்கிறான் என்பதைக் கூறி, "சமதர்மமே இந்து மதத்தின் நோக்கம்", என்று கவியரசு கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதம் மூலமாகக் கூறுகிறார் (Gandhi Kannadasan, 2020).

தேவைகளைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக் கொள்கிறமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அமைதி ஏற்படாது. தரித்திரம், துக்கம் எல்லாந்தான் உண்டாகும். எனவே, மனிதன் சமதர்மத்தினைக் கடைப்பிடித்து சமூகத்திற்கு நலன் பயக்க வேண்டும்.

## இல்லறம் பற்றிய சிந்தனைகள்

வள்ளுவனும் வாசுகியும் வாழ்ந்த வாழ்வு இல்லறம். பாரதியும் செல்லம்மாவும் வாழ்ந்த வாழ்வு இல்லறம். நான்கு சுவர்கள் மற்றும் மேற்கூரையுடன் மூடப்பட்ட இல்லத்தில் கணவன் மனைவி ஆகியோர் விருந்தோம்பி, ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டு, வரும் சுகத்திலும் துயரிலும் பங்கு கொண்டு, இல்லாதவற்கு ஈந்து வாழும் வாழ்வே இல்லறமாகும். ஆனால் "திருமணம் என்பது ஒருநாள் கூத்தல்ல. ஆயுள் முழுவதும் கணவன் மனைவியைப் பூட்டி வைக்கும் பூ விலங்கு" என இல்லறமாகிய நல்லறத்திற்கு விளக்கம் தருவதை இங்கு கவனிக்கத்தக்கது (Tamilarasi, 2004).

இல்லற நிம்மதிக்கு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். தேவையற்ற பேச்சுப் பேசாமல் இருந்தாலே இல்லறத்தில் நிம்மதி உண்டாகும்.

எள்ளைக் கொட்டினால் பொறுக்கி விடலாம். சொல்லைக் கொட்டினால் பொறுக்க முடியாது. அதனால் தான் வார்த்தையில் நிதானம் தேவை. சொல்லால் பட்டகாயம் ஆறாது, என்பதைத் தான் வள்ளுவர்,

"தீயினால் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு"

என்கிறார் (Kanniyappa Nayakar, 1968). கணவன், மனைவி அனுசரித்து நடந்தால் உலகமே தன்னுள் அடங்கும். எல்லாவற்றிற்கும் மனதுதான் காரணம் என்பதை,

"நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி

நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே!

கொஞ்சம் மனமும் குளிர்ந்த வாழ்வும்

கொண்டு வந்தாலென்ன நமக்குள்ளே"

என்கிறார் (Gandhi Kannadasan, 2020). இவ்வாறு இல்லறத்தை நல்லறமாக மாற்றுவதற்கான அற்புதக் கருத்துகளை சமூகச்செய்திகளாகக் குறிப்பிடுகிறார். அர்த்தமுள்ள இந்துமதத்தில் இவை போன்ற பல வகையான அறக்குறிப்புகள் காணப்படுகின்றன.

## முடிவுரை

இக்கட்டுரை 'அர்த்தமுள்ள இந்து மதம்' எனும் நூல் வெளிப்படுத்தும் அறக்கருத்துகளை விளக்கியுள்ளது. மேலும், தனி மனித ஒழுக்கம், சமூக வாழ்வியல், அறச்சிந்தனையை வளர்த்தல், இல்லறம், சமதர்ம சிந்தனைகள் முதலான அறக்கருத்துகளையும் இக்கட்டுரை திறம்பட எடுத்துரைத்துள்ளது. ஒழுக்கம், நிம்மதியான வாழ்க்கை என்ற இரண்டு தண்டவாளங்களுக்கிடையே செல்லும் மனிதனின் வாழ்க்கையானது, சமூகத்தில் நன்மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. "உலகத்துக்கு சேவை செய்தாலே சொந்த கஷ்டத்தை மறைக்க வழி உண்டாகும்" என்று கண்ணதாசன், தான் என்ற சுயநலம் கருதாமல் சமூகத்திற்கு உதவி செய்து வாழ வேண்டும் என்று குறிப்பிடுகிறார். நீ உன்மீது அன்பு செலுத்துவது போல் உன் அயலார் மீதும் அன்பு செலுத்துவாயாக என்று பைபிள் கூறுகின்றது. அன்பு என்பது மனிதனின் வாழ்வில் முக்கியமான ஒன்று. அன்பினாலே வாழ்க்கை பாதையைச் செம்மையாக மாற்றிக்கொள்ளலாம். நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் அன்பு காட்டுவதன் மூலம் தற்காப்பைப் பெறுகிறோம் என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## References


Annithamasu, (2000) Thamizhar samoogaviyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Gandhi Kannadasan, (2020) Arthamulla hindu matham, Kannadasan Publications, Chennai, India

Kannadasan, (1998) thiraiyisai padalgal, Vanathi Publications, Chennai, India.

Kanniyappa Nayakar, R. (1968) Thirukkural, Vanathi Publications, Chennai, India.

Tamilarasi, M. (2004) Panne Vilithru, Surya Publications, Tiruvallur, India.

Tholkappiyar, (1996) Tolkappiyam, Saiva Siddhanta Publication, Tirunelveli, India.

Vivekananda, Swami, (1985) Gnana Deepam (Thamizhsudar), Sri Ramakrishna Math, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License